**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 31.01.2020–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி,
நாள் : **30.01.2020**

தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சி பாரதிதாசன் சாலை நடுநிலைப் பள்ளியில் பழுதடைந்த கட்டடத்தை இடிக்க உரிய உறுதிச்சான்று பெற ரூ. 7080/– அரசு பொறியியல் கல்லூரிக்கு செலுத்த பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன்படி, கட்டட உறுதிச்சான்று பெற தொகை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 7080/– பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று செலுத்த மன்றம் அங்கீகரிக்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(1749/19/இ1)

**தீர்மானம் எண். 724**

அனுமதிக்கப்பட்டது.

(2) இந்நகராட்சி புதிய பேருந்து நிலைய உயர் மின் கோபுர விளக்குகள் போதிய வெளிச்சம் இல்லாததால், அதிக வெளிச்சம் வழங்க 4 எண்ணிக்கை 200 w LED விளக்குகள் மற்றும் Timer சுவிட்ச் பொருத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 83000/– (ரூபாய் எண்பத்து மூன்றாயிரம் மட்டும்) பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமபெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 83000/– மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2) முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(137/20/இ1)

**தீர்மானம் எண். 725**

அனுமதிக்கப்பட்டது.

(3) இந்நகராட்சி பழைய பேருந்து நிலைய உயர் மின் கோபுர விளக்குகள் போதிய வெளிச்சம் இல்லாததால், அதிக வெளிச்சம் வழங்க 4 எண்ணிக்கை 200 w LED விளக்குகள் மற்றும் Timer சுவிட்ச் பொருத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 83000/– (ரூபாய் எண்பத்து மூன்றாயிரம்) பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமபெற்று விலைப்புள்ளி கோரியதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 83000/– மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2) முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(137/20/இ1)

**தீர்மானம் எண். 726**

அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்திற்கு நாள்தோறும் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் குத்தகை ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளாததால் துறை மூலமாக நுழைவுக் கட்டணம் வசூல் செய்ய ரூ. 12/– மதிப்பிலான ரசீதுகள் அச்சடிக்க வேண்டியுள்ளது. ஒரு நாளைக்கு 210 பேருந்துகளுக்கு வசூல் செய்ய இருப்பதால் 210x30x13 மாதங்களுக்கு 10000 எண்ணிக்கை ரசீதுகள் ஈரோடு மாவட்ட பெண்கள், எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட் என்கின்ற நிறுவனத்தில் அச்சிட்டுப் பெறவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 25000/–க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(2709/17/அ2)

**தீர்மானம் எண். 727**

அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சி புதிய பேருந்து நிலைய உயர் கோபுர விளக்குகளை அதிக வெளிச்சம் வழங்கும் LED மின் விளக்குகளாக மாற்ற பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | ஸ்ரீ குமரன் எலக்ட்ரிக்கல்ஸ், சேலம் | – | ரூ. 82500/– |
| 2) | யாஷ்வைஷ் எலக்ட்ரிக்கல்ஸ், குருசாமிபாளையம் | – | ரூ. 87020/– |
| 3) | ராமு லைட்டிங் சென்டர், சேலம் | – | ரூ. 85876/– |

குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய ஸ்ரீ குமரன் எலக்ட்ரிக்கல்ஸ், சேலம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணியாணை வழங்கியமைக்கும், தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்க்கொண்டமைக்கும் மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அங்கீகரிக்கலாம்.

(137/20/இ1)

**தீர்மானம் எண். 728**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சி பழைய பேருந்து நிலைய உயர் கோபுர விளக்குகளை அதிக வெளிச்சம் வழங்கும் LED மின் விளக்குகளாக மாற்ற பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) ஸ்ரீ குமரன் எலக்ட்ரிக்கல்ஸ், சேலம் – ரூ. 82500/–
2) யாஷ்வைஷ் எலக்ட்ரிக்கல்ஸ், குருசாமிபாளையம் – ரூ. 87020/–
3) ராமு லைட்டிங் சென்டர், சேலம் – ரூ. 85876/–

குறைந்த விலைப்புள்ளியினை வழங்கிய ஸ்ரீ குமரன் எலக்ட்ரிக்கல்ஸ், சேலம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணியாணை வழங்கியமைக்கும், தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்க்கொண்டமைக்கும் மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அங்கீகரிக்கலாம்.

(137/20/இ1)

**தீர்மானம் எண். 729**

அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சி பேருந்து நிலையத்தில் இடிக்கப்பட்ட கடைகளுக்கு மேற்கூரை (GI Sheet) அமைத்து மின் வசதிகள் வழங்க தயார் செய்யப்பட்ட ரூ. 40.00 இலட்சம் (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் இருந்தோ அல்லது கடைகள் குத்தகைதாரர்களிடம் முன்பணமாக வசூல் செய்தோ பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி அல்லது கடைகளின் குத்தகைதாரர்களிடம் முன்பணமாக வசூலித்தோ மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(3218/19/இ1)

**தீர்மானம் எண். 730**

அனுமதிக்கப்பட்டது.

(8) இராசிபுரம் நகராட்சியில் நுண்ணுயிர் கலவை உரக்கிடங்கு (MCC) அமைக்க குப்பைகள் அகற்றும் பணிக்கு 24.01.2020 அன்று பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு பி. மன்னர் மன்னன், ஒப்பந்ததாரர், நாமக்கல் – மதிப்பீட்டைவிட 0.38% குறைவு.
2) திரு ஆ. மதியழகன், ஒப்பந்ததாரர், இரா. பட்டணம் – மதிப்பீட்டைவிட 4.23% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.38% குறைவான திரு பி. மன்னர் மன்னன், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி மேற்க்கொள்ளப்பட்டதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.38% குறைவான திரு பி. மன்னர் மன்னன், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி மேற்க்கொள்ளப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(இ1/3537/19)

**தீர்மானம் எண். 731**

அனுமதிக்கப்பட்டது.

**(9)** இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில் கூடுதல் கணினி வசூல் மையம் ஏற்படுத்துதல் பணிகள் மேற்கொள்ள **24.01.2020** அன்று வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

**1)** திரு பி. மன்னர் மன்னன், ஒப்பந்ததாரர், நாமக்கல் – மதிப்பீட்டைவிட **2.26%** அதிகம்.
**2)** திரு ஆ. மதியழகன், ஒப்பந்ததாரர், இரா. பட்டணம் – மதிப்பீட்டைவிட **0.02%** குறைவு.

மதிப்பீட்டைவிட **0.02%** குறைவான திரு ஆ. மதியழகன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மதிப்பீட்டைவிட **0.02%** குறைவான திரு ஆ. மதியழகன், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(இ1/45/20)**

**தீர்மானம் எண். 732**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– பெ. நடேசன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.